ல்லூர்க் கந்தன் திருவிழா
மில்க்வைற் விற்பனை
நிலையத்தில்

ரூபா 25/-க்கு சோப் வாங்குவோர்க்கு அழகிய பொலித்தீன் பை, அகத்திக் கன்று, கரிசலாங்கண்ணி, கீரைவிதை அன்பளிப்பு

மேலுறைகளுக்கான அன்பளிப்புகளும் வழங்கப்படும்.

பக்கங்கள் நான்கு | விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 159 ஞாயிறு 22-07-1990 (ஆடி 06) துல்ஹஜ் 28

மில்க்வைற் சலவைப்
பவுடர் தரும் சலவை
துரிதமானது சிறந்தது
சிக்கனமானது.
50 கிறாம் பக்கெற் ரூ. 2.75 சதம்
140 ,, பெட்டி ரூ. 8.00
450 ,, பெட்டி ரூ. 22.00
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

### கடந்தமாதம் கிளிநொச்சியில்

# சரணடைந்த 17 பொலிஸார் புலிகளால் நேற்று விடுதலை!

## மண்மீட்பில் இணைவோம் என்கின்றனர்

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிவேக முற்றுகையின் போது சரணடைந்த பதினேழு ஸ்ரீலங்கா பொலிஸாரும் நேற்று விடுதலைப் புலிகளின் தலைமையகத்தில் வைத்து நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டனர்,

இவர்களில் 9 பேர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள். ஏனையோர் கிழக்கு மாகாணத் தமிழர், ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்,

இவர்கள் நேற்று பத்திரிகையாளர் முன்னிலையில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

தமது படையின் பொலிஸாரைத் தாம் கொன்றுள்ளதாக ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டு வரும் திட்டமிட்ட பிரசாரத்தைப் பொய்ப்பித்து உண்மை நிலையினை ஊர்ஜிதம் செய்யும் வகையில் இவ்

—04ஆம் பக்கம் பார்க்க

## ஹெலிப் பொதிகளில் 4 ஆயிரம் ரவைகள்

கிளிநொச்சி இராணுவ முகாமுக்கு ஹெலிகொப்டர் மூலமாக நேற்று முன்தினம் பகல் போடப்பட்ட எட்டுப் பொதிகளில் மூன்று விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இவற்றில் நான்காயிரம் துப்பாக்கி ரவைகள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப் பொதிகள் போடப்படும் வேளை நான்கு பொம்மர்கள் சுற்றிச் சுழன்று வானில் வட்டமிட்டதனையும் காணக் கூடியதாக இருந்தது.

35 ஸ்ரீ

## புலிகளினால் விடுதலையான ஸ்ரீலங்கா பொலிஸ் விபரம்

கிளிநொச்சி பொலிஸ் நிலைய முற்றுகையின் போது சரணடைந்து விடுதப்புலிகளால் விடுதலை செய்யப்பட்ட 17 பொலிஸ்காரரின் பெயர் விபரங்கள். எஸ். வில்சன் (திருக்கோயில்) ரி. பது

—04ஆம் பக்கம் பார்க்க

## தமிழர் கொலையை எதிர்க்கிறோம் பாரதீய ஜனதாக் கட்சி கண்டனம்

''தீவிரவாதத்தைத் தடுக்கிறோம் என்ற பெயரில் ஸ்ரீலங்கா அரசு அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று வருவதை எதிர்க்கிறோம்'' என்று நேற்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் திரு. எல். கே. அத்வானி தெரிவித்தார்.

''தமிழர் படுகொலை செய்யப்படுவதையிட்டு இக் கட்சி அனுதாபம் கொள்கிறது, கவலை அடைகிறது'' என்றும்

—04ஆம் பக்கம் பார்க்க

## புலிக்குப்பலி

கிளிநொச்சி இராணுவ முகாம் உயர் அதிகாரி ஒருவர் விடுதலைப்புலிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கிலக்காகி ஸ்தலத்தில் கொல்லப்பட்டார்.

மேற்படி இராணுவஅதிகாரி முகாமின் பின் பகுதியான கிளிநொச்சி குளம் பகுதியை பார்வையிட வந்தபோதுசுற்றி வளைத்து காவலில் இருந்த விடுதலைப் புலிகள் சுட்டதில் அதிகாரி கொல்லப்பட்டார்.

(35-ஸ்ரீ)

## ஆறு கட்சிகள் ஆராய்வு

நேற்று கொழும்பில் ஈ. பி. ஆர். எல்.எப், டெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஈ. என். டி. எல்.எப், புளொட் முஸ்லீம் காங்கிரஸ் ஆகிய குழுக்கள் சந்தித்து தற்போதைய வடக்குக் கிழக்கு நிலைமை குறித்து ஆராய்ந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய இராணுவ நடவடிக்கைகளை தாம் ஆதரிப்பதாகவும், பிரிவினையை எதிர்ப்பதாகவும், ஆனால் அதிகாரம் கூடிய மாகாண அமைப்பையே ஏற்றுக் கொள்வதாகவும் நேற்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது எனக் கூறப்பட்டது.

நேற்றைய இக்கூட்டத்தில் ஈரோஸ் பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படித் தகவல்களை

04ஆம் பக்கம் பார்க்க

## உணவுப் பொருட்களுடன் லொறிகள் வந்துள்ளன

யாழ். நகரிலிருந்து உணவுப் பொருட்களைப் பெற்றுவருவதாக மதவாச்சி சென்ற 24 லொறிகளும் நேற்று நண்பகல் யாழ். திரும்பியுள்ளன. செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட இந்த வாகனங்கள் பரந்தன், பூநகரி, செட்டிகுளம் ஊடாக மதவாச்சி சென்றடைந்து அங்கிருந்து அரிசி,

—04 ஆம் பக்கம் பார்க்க

## கட்டுவனில்

கட்டுவன் பகுதியில் பல வீடுகள் ஷெல் தாக்குதலினால் முற்றாகத் தரை மட்டமாக்கப்பட்டுள்ளன.

மயிலிட்டிப்பகுதியில் சில குடிசை வீடுகள் ஷெல் தாக்குதலினால் தீக்கிரையாகியுள்ளன.

(48 கி)

## பெண்ணுக்கு உதவிய பாதிரியார் படுகொலை

கடந்த புதன்கிழமை மட்டக்களப்பில் குருக்கள்மடம் பகுதியில் நடைபெற்ற ஹெலித் தாக்குதலில் காயமடைந்த பெண் ஒருவரை கூட்டிச் சென்ற கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் காத்தான் குடியில் முஸ்லீம் காடையர் கும்பல் ஒன்றினால் அடித்துக் கொல்லப்பட்டார் என விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இதே சமயம் அப்பாதிரியாருடன்சென்ற முதியவர் ஒருவரும் அக்கும்பலினால் கற்களால் அடித்துக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(ஸ்ரீ)

### ஈழத்தமிழர் இன்னல்; நெஞ்சம் நோகிறது என்கிறார் கலைஞர்

# யுவதிகள்கடத்தல்; இளைஞர்கரம் துண்டிப்பு

இலங்கையில் அரசுபடையிரால் தொல்லைகள் டைந்து தமிழகம் வரும் கதிகளை நேரில் சந்தித்த ழிழக முதலமைச்சர் கலைர் மு. கருணாநிதி அவர் துயரினை அறிந்து தம் நெஞ்சம் நொந்ததாக நேற் த் தெரிவித்தார்.

மாமல்ல புரத்தில் அவர் ற்று செய்தியாளர்களை தித்தார்.

அத்தருணம் அவர் சொன்னார்; ''இலங்கையில் நிகழும் ரசுபடைகள் தொல்லை, காடுமை தாங்காமல் தமிழ வந்து சேரும் அகதிகளை சந்தித்தேன், விபரங்களை நேரில் கேட்டறிந்தேன், புரிந்து கொண்டேன்.

அவர்கள் இரவுபகலாக ஒரே விமானக் குண்டுவீச்சு, வேதனை தாங்க முடியாது உயிரைக் காப்பாற்றத்தான் இங்கு வந்தோம் என்றுசொன்னார்கள்.

பதினைந்து வயதுக்கு மேற்பட்ட தமிழ் யுவதிகளை இராணுவத்தினர் கடத்திக் கொண்டுபோய் விடுவதாகவும் அவர்கள் கதி தெரியவில்லை என்றும் அவர்கள் என்னிடம் கண்ணீர்மல்க முறையிட்டார்கள்.



தம் கைகளில் சிக்கும் தமிழ் வாலிபர்களின் கைகளை இலங்கை இராணுவம் வெட்டி விடுவதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

கொடுமை தாங்க முடியாமல் மேலும் பெரும் எண்ணிக்கையானோர் தமிழகம் வரக் காத்துக் கொண்டிருப்பதாகவும் அவர்கள் கூறினார்கள்'' என்றார் கலைஞர்.

— 4ஆம் பக்கம் பார்க்க

## வி. பி. சிங் - கலைஞர் விரைவில் டில்லியில் சந்திப்பர்?

இலங்கை இனப்பிரச்சினை மேலும் இறுகி வருவதாலும் அகதிகள் பெரும் எண்ணிக்கையில் தமிழகம் வந்து குவிவதாலும் இது தொடர்பாக மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி பிரதமர் திரு விஸ்வநாத் பிரதாப் சிங்கும்,

— 04 ஆம் பக்கம் பார்க்க




# சடலங்கள் கரை ஒதுங்குவதால் மீன் உண்ண மக்கள் தயக்கம்

(மண்டைதீவு)

மண்டைதீவு, அல்லைப்பிட்டிக் கடற்பகுதியில் கடந்த சிலநாட்களாக சடலங்கள் கரை ஒதுங்குவதைத்தொடர்ந்து மீனவர்கள் அப்பகுதியில் மீன்பிடிப்பதனை நிறுத்தியுள்ளனர்.

இப்பகுதியில் பிடிக்கப்பட்ட பெருந்தொகையான மீன்களை வாடிக்கையாளர்கள் வாங்க மறுத்ததினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் நாளாந்த மீன் பிடித்தல் மூலம் அன்றாட வாழ்க்கையை நடாத்தும் மீனவர்கள் பெரும்பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். (ப-12 கி)

# தெல்லிப்பழை வைத்தியசாலையும் ஸ்தம்பிதமடைந்தது

தெல்லிப்பழை அரசினர் மருத்துவமனை முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

வார்ட்டுகளில் நோயாளர்களைக் காணவில்லை, ஆஸ்பத்திரி வெறிச்சோடிக்காணப்படுகிறது.

ஆஸ்பத்திரியில் ஊழியர்களை மட்டுமே காணக்கூடியதாக உள்ளது.

பலாலியிலிருந்து ஏவப்படும் ஆட்லறி ஷெல்லினாலும், வான் தாக்குதலினாலுமே இந்த நிலை தொடர்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (48கி)

# பனை வெல்லத்துக்கு கிராக்கி உற்பத்தியை அதிகரிக்க முயற்சி

யாழ்ப்பாணத்தில் பனை வெல்லத்துக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. தினமும் மக்கள் கற்பக விற்பனை நிலையங்களை நாடிப் படை எடுத்து வருகின்றனர்.

தற்பொழுது மீசாலை, சாவகச்சேரி, வரணி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் மட்டுமே பனைவெல்ல உற்பத்தி செய்யப்படுவதால் இந்த உற்பத்தி வடக்கின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருப்பதாகவும் ஏனைய பகுதிகளிலும் பனை வெல்ல உற்பத்தியை அதிகரிக்க பதநீர் இறக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பனை அபிவிருத்திச் சபையின் அலுவர் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டங்கள் பனை வளம் நிறைந்த சகல பகுதிகளிலும் நடைபெற்று வருகின்றன. (33கி)

# பாதுகாப்பு நிதியிலும் மோசடி நடக்கிறதாம்

தேசிய பாதுகாப்பு நிதி சேகரிப்பில் மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில ஸ்தாபனங்களும், தனியார்களும் பாதுகாப்பு நிதிக்கென பெருமளவில் பணம் சேகரித்துள்ள போதிலும் அதற்குரிய கணக்கில் அத்தொகை சேர்க்கப்படவில்லை என்பது தற்பொழுது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்துஉத்தியோக பூர்வ அமைப்புக்கள் மூலமே பாதுகாப்பு நிதிக்கு பணம் வழங்கும்படியும், அனுமதி பெறாதவர்களிடம் வழங்க வேண்டாமெனவும் அரசாங்கம் கேட்டுள்ளது.(கி)

# அகதிமுகாமில் வயிற்றோட்டம்

வேலணைப் பகுதிகளில் உள்ள அகதிமுகாம்களில் வயிற்றோட்ட நோய் அதிகமாகப் பரவுகிறது.

இப்பகுதிகளில் ஈக்களின் பெருக்கமும் அதிகரித்துள்ளது. ஈக்கள் மூலம் வயிற்றோட்டம், வாந்தி போன்ற நோய்கள் பரவி வருவதுடன் கண் நோயும் அதிகமாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வேலணை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் தற்போதுநோயாளர்கள்தொகை அதிகரித்துள்ளதாகவும் தேவையான மருந்துவகைகள் இங்கு இல்லாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (24,கி)

# இ. போ. ச கலைக்கப்பட்டது

இலங்கை போக்குவரத்துச் சபை நாளை திங்கட்கிழமை முதல் கலைக்கப்படவுள்ளது.

இதற்கமையப் போக்குவரத்துச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளார்கள்.

இலங்கை போக்குவரத்துச் சபையை மக்கள் மயப்படுத்தும் திட்டத்திற்கமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் மயப்படுத்தும் திட்டத்தை செயற்படுத்தவும், நிர்வகிக்கவுமென புதிய ஆலோசனைச் சபையொன்று அமைக்கப்படவுள்ளது. (கி)

சர்வதேச ஸ்தாபனம் பொறுப்பேற்க வேண்டும்

# அகதிகளைத் திருப்பி அனுப்ப கலைஞர் கருணாநிதி நிபந்தனை

தமிழகத்தில் தற்பொழுது தங்கியுள்ள அகதிகளை இங்கு திருப்பி அனுப்புவதாயின் அவர்களுக்கான பாதுகாப்புப் பொறுப்பை ஐக்கிய நாடுகள் அகதிகள் ஸ்தாபனம் அல்லது சர்வதேச ஸ்தாபனங்கள் ஏற்க வேண்டும்.

இவ்வாறு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி நேற்று சென்னையில் அறிவித்துள்ளார்.

தற்பொழுது தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்றுள்ள வடக்கு, கிழக்குப் பகுதி மக்களை திருப்பி அனுப்பி வைக்கும்படி பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன்விஜேரத்தின தமிழக முதல்வரை சில தினங்களுக்கு முன் கேட்டிருந்தார். இந்த அகதிகள் இலங்கையில் அரசாங்கத்தால் அமைக்கப்படும்பொதுவானஅகதிமுகாம்களில் தங்க வைக்கப்படுவார்களெனவும் அமைச்சர் ரஞ்சன் அறிவித்திருந்தார்.

அமைச்சரின் இக்கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே கலைஞரின் பதில் அமைந்திருப்பதாகக் கருதப்படுகின்றது

தற்பொழுது வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உயிருக்கு பாதுகாப்பில்லை என்று கருதியே இந்த மக்கள் தமிழகத்திற்கு படகுகளில் அகதிகளாக தப்பி வந்துள்ளனர்.

எனவே எம்மிடம் அடைக்கலம் கோரி வந்தவர்களை பாதுகாப்பற்ற நிலையில் திரும்பிப்போ என நாம் எப்படிக் கேட்க முடியும்? எனவும் முதல்வர் கேள்வி எழுப்பினார்.

இலங்கை அமைச்சரின் கோரிக்கைப்படி அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதாயின் அந்த தமிழ் மக்களுக்கான பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்புக்களை ஐக்கிய நாடுகள் அகதிகள் ஸ்தாபனமோ அல்லது சர்வதேச ஸ்தாபனங்களோ ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (கி)

## பங்கீட்டுக்கு சீனி விநியோகம்

(காவலூர்)

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பங்கீட்டடிப்படையில் சீனி வழங்கி வருகின்றது.

குடும்பமொன்றிகுற்பங்கீட்டு அட்டைக்கு வாரத்திற்கொருமுறை காற் கிலோ சீனி வழங்கி வருகின்றது. கடந்த வாரங்களில் ஒரு கிலோவாகவும் பின்னர் அரைக்கிலோவாகவும் சீனி வழங்கப்பட்டது. இன்னும் சில தினங்களுக்கு இச்சீனி வழங்கப்படும். (24,கி)

**விற்பனைக்கு**

பனம் பொருட்கள், புழுக்கொடியல் மா, ஒடியல்மா என்பன எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா கோப்பிக்கடை. திருநெல்வேலி. (07032)

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில்

# மூன்று ஹெலிகளின் தாக்குதலால் போக்குவரத்து பாதிப்பு, மக்கள்கிலி

ஒன்றாக அணியாகப் பறந்துதிரிந்து தாக்குதல் நடாத்தும் ஹெலிகப்டர்களின் அட்டகாசத்தால் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி பகுதிகள் நேற்று ஸ்தம்பிதமடைந்திருந்தன.

பலாலிக்கும் - ஆனையிறவுக்கு மிடையே வல்லைவெளி, வாதரவத்தை, சரசாலை, சாவகச்சேரி, மீசாலை மிருசுவில், பளை மார்க்கமாக இந்த மூன்று ஹெலிகப்டர்களும் நேற்று அடிக்கடி கூட்டமாகப் பறந்து திரிந்து தாக்குதல் நடாத்தின.

வீதிகளில் வாகனங்களைத் துரத்தி வந்து தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டதினால் இப்பகுதியில் மக்கள் மத்தியில் பீதி கணப்பட்டது.

இதே ஹெலிகப்டர்கள் வல்லைவெளிப் பகுதியிலும் வாகனங்கனின் மீதும், பாதசாரிகள் மீதும் நேற்று தாக்குதலை நடாத்தின. கி

# பனங்கட்டியில் கலப்படம் மா இல்லை;தவிடு தாராளம்

சீனித் தட்டுப்பாட்டை அடுத்து குடாநாட்டில் பனங்கட்டிக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இந்த கிராக்கியைப் பயன்படுத்தி பனங்கட்டிக்குட்டான்களில் தவிடு பெருமளவில் கலக்கப்பட்டு வருகின்றது.

தவிடு கலக்கப்பட்ட பனங்கட்டி இனிப்புத்தன்மை, சுவை அற்றதாக இருப்பதனால் பாவனையாளர்கள் ஏமாற்றம் அடைகின்றனர்.

முன்னர் பனங்கட்டியில் கோதுமை மா கலக்கப்பட்டது. தற்பொழுது மாவிற்கும் தட்டுப்பாடு உள்ளதினால் தாராளமாகக் கிடைக்கும் தவிடு கலக்கப்படுகின்றதாம். (17 கி)

# காலை நேரக் குண்டுவீச்சில் சந்தை, வீடுகள் சேதம்

யாழ். நகரில் தினசரி பிற்பகலிலும், மாலையிலும் இடம்பெற்றுவந்த விமானக் குண்டு வீச்சு நேற்று வழமைக்குமாறாக காலையிலும் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 7.45 மணி முதல் சீனத்தயாரிப்பு கருமை நிறக் குண்டுவீச்சு விமானமொன்றுநகரின் மேல் பல தடவைகள் வட்டமிட்டுகுண்டுகளை வீசியது.

இக் குண்டுகளில் சில குருநகர், சின்னக்கடைப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன.இதனால் சின்னக்கடை மீன் சந்தையும், அதற்கு அருகில் இருந்த சில வீடுகளும் சேதமடைந்தன. பேராலயப் பகுதியில் வீடொன்றும் தீப்பற்றியது.

மற்றும் சில குண்டுகள் கொட்டடி முத்தமிழ் வீதிப் பகுதியிலும் வீழ்ந்து வெடித்தன. (கி)

# தருமப்பணம் இனி தாமதமின்றி கிடைக்கு

யாழ். மாவட்டத்தில் தபால் அலுவலகங்களின் மூலம் தருமப்பணம் எடுத்து வந்தவர்களுக்கு தடையின்றி கொடுப்பனவுகளை வழங்க வட மாகாண தபால் அத்தியட்சகர் எஸ். எம். சேதுகாவலர் நடவடிக்கை எடுத்துள்ளார்,

இதன்படி இனி மேல் சம்பந்தப்பட்ட உதவி அரசாங் அதிபர்கள் தமதுபகுதிக்குரி தருமப்பணம் பற்றுக் சீட்டு களையும், அதற்குரிய பண தையும் ஒன்றாக உரிய தபா நிலையங்களில் கையளிப்பர் தபால் அதிபர்கள் அவற் தாமதமின்றி உரியவர்களிடப் வழங்குவர் எனவும் தெரிவி கப்பட்டது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில்

# உயர்தர பரீட்சைக்குப்பதிலாக பின்னர் மாற்றுப் பரீட்சை

வடக்குக் கிழக்குப் பகுதியில் கல்விப் பொதுத்தரா தரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்குப் பதிலாக மாற்றுப்பரீட்சை ஒன்றினைப் பின்னர் நடாத்த ஆலோசிக்கப்படுமென கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

திட்டமிட்டபடி ஆகஸ்ட் மாதம் 10-ம் திகதி கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகும். எனினும் வடக்குக், கிழக்கு நிலைமையைக் கருத்திற்கொண்டுஇப்பகுதிமாணவர்களுக்கென மாற்றுப்பரீட்சையொன்றைப் பின்னர்நடாத்துவது பற்றி ஆலோசிக்கப்படுமெனவும் லலித் தெரிவித்துள்ளார்.

இதே வேளை கொழும்பிலோ நாட்டின் இதரபகுதிகளிலோ இம்முறை உயர்தரப் பரீட்சை எடுக்கவுள்ள மாணவர்கள் எவராவது வடக்கு, கிழக்கில் தற்பொழுது சிக்கியிருந்தால் அவர்கள் தமது பகுதிகளுக்குத்திரும்ப போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்படுமெனவும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

தான் அமைச்சராக இருக்கும்வரை எந்தவொரு பரீட்சையும் ஒத்தி வைக்கப்படமாட்டாது எனவும், வடக்கு கிழக்குப்பரீட்சார்த்திகள் ஏனையபகுதிகளுக்குச் சென்று பரீட்சை எழுதலாம் எனவும் அமைச்சர் லலித் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை பரீட்சை ஒத்திவைக்கப்படாமல் நடாத்தப்பட்டால் அதனைத்தாம் பகிஷ்கரிக்கப் போவதாகவும், பரீட்சைக்குத் தோற்றுவோரும் பரீட்சை நடாத்த ஒத்துழைக்கும் அதிகாரிகளும் விரோதிகளாகக் கருதப்படுவர் எனவும் வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (கி)

அபிவிருத்திச்சங்க சமாஜம்கோரிக்கை

## மாணவர் உளரீதியில் பாதிப்பு; பரீட்சை ஒத்திவைப்பு அவசியம்

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க. பொ. த (உயர்தர) பரீட்சையை ஒத்திவைக்குமாறு யாழ். பாடசாலைகள் அபிவிருத்திச் சங்க சமாஜம் ஜனாதிபதி பிரேமதாஸாவை கடித மூலம் கோரியுள்ளது.

தற்போது நடைபெறும் போரினால் சின்னா பின்னமடைந்துள்ள வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இப் பகுதிகளிலுள்ள மாணவர்கள் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர் தர பரீட்சைக்குத் தேற்ற முடியாதவர்களாகவுள்ளமையால் அப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு கல்வி அமைச்சரை வேண்டுமாறு ஜனாதிபதியை இச் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இப் பகுதிகளிலுள்ள மாணவர்கள் கடந்த 12 மாதங்களுக்கு மேலாக தமது பாடசாலைக் கல்வியை தொடர முடியாமல் உள்ளார்கள். அதிகமான மாணவர்கள் இடம் பெயர்ந்தும் மேலும் சிலர் தமது ஆசிரியர்களை இழந்துமுள்ளார்கள். பல மாணவர்கள் உளவியல் ரீதியாக தமது கல்வியைத் தொடர முடியாதுள்ளனர். அதிகமான பாடசாலைகள் அகதிமுகாமாகவுள்ளன. அத்துடன் பல பாடசாலைக் கட்டடங்கள் தளபாடங்கள் சேதமடைந்துள்ளன.

இக் காரணங்களினால் ஆகஸ்ட் உயர்தர பரீட்சையை ஒத்திவைக்குமாறு இச் சங்கம் ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

சமாஜ செயலாளர் எஸ். எம். சேதுகாவலரினால் ஒப்பமிடப்பட்ட இக் கடிதத்தின் பிரதிகள் கல்வி அமைச்சருக்கும், பரீட்சை ஆணையாளருக்கும், வடக்கு-கிழக்கு மாகாண ஆளுனருக்கும், மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கும்,யாழ்ப்பாண அரச அதிபருக்கும், யாழ்ப்பாண கல்வி அதிகாரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த ஆசிரியர்கள்

## நிலைமை சீராகும் வரை இங்கேயே தங்க முடிவு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து யாழ். குடா நாட்டிற்கு இடம், பெயர்ந்துள்ள ஆசிரியர்கள் பாதுகாப்பான போக்குவரத்து வசதிகள் மீண்டும் கிடைக்கும்வரை யாழ். குடா நாட்டை விட்டு வேலைக்கு செல்வதில்லை எனத் தீர்மானித்துள்ளனர்,

தாம் மீண்டும் வேலைக்கு செல்லும்வரை தமக்குரிய வேதனத்தை இங்கு தர வேண்டும், மீண்டும் பணியாற்றும் சூழ்நிலை வரும் வரை, இங்கு நிற்கும் காலத்திற்கு விசேட லீவு வழங்க வேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்றை இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் நிறைவேற்றியுள்ளனர்.

யாழ். கல்வித்திணைக்களத்தில் அண்மையில் கூடிய போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இத்தீர்மானம் யாழ், கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் ஊடாக, யாழ் அரசாங்க அதிபர் கல்வி அமைச்சர், ஜனாதிபதி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (37)

## எரித்துக் கொலை

மட்டக்களப்பில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 35 தமிழ் மக்களின் சடலங்கள் கடந்த வியாழக்கிழமை இராணுவத்தினரால் பல்வேறு இடங்களில் எரியூட்டப்பட்டதாகவிடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச் சடலங்கள் யாவும் கருகிய நிலையில் உள்ளதாகவும் பழுகாமத்தில் 9 சடலங்களும் கோயில் போரதீவில் 12 சடலங்களும் பெரியபோரதீவில் 8 சடலங்களும் வெல்லாவெளியில் 5 சடலங்களும் கற்சேனையில் ஒருசடலமும் காணப்பட்டதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (03- ஸ்ரீ)

## மட்டக்களப்பு வாவியில் படகுப் பயணத்திற்குத் தடை

மட்டக்களப்பு வாவியிற் படகுகளிற் பயணம் செய்வதைப் படையினர் முற்றாகத் தடைசெய்துள்ளனர்.

முன்னர் ஒரு படகில் மூவருக்கு மேல் பயணம் செய்யக்கூடாதென விமானப்படையால் அறிவிக்கப்பட்டிருந்தது, தற்பொழுது வாவியில் எவரும் பயணம் செய்யவோ, கடற்றொழில் செய்யவோ கூடாதென தடைவிதிக்கப் பட்டுள்ளது,

மட்டக்களப்பு வாவியைச் சுற்றியுள்ள மக்கள் தங்கள் பயணங்களுக்குப் படகுகளையே பெருமளவிற் பயன்படுத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (கி)

## இராணுவம் நீர் திருடுகிறது

மக்கள் தேவைக்கென வழங்கப்படும் குடிநீரை இடையில் திருடி வருகிறது அரசின் இராணுவம்.

தற்பொழுது மன்னாருக்கு முருங்கனில் இருந்தே குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பிரதான நீர் விநியோகக் குழாய்கள் தள்ளாடி முகாம் வழியாகவே செல்கின்றன.

இப்பகுதியில் பிரதான நீர்க் குழாய்களைத் துண்டித்துள்ள இராணுவத்தினர், அக்குழாயிலிருந்து தமது பாவனைக்கான நீரைப் பெற்று வருகின்றார்கள்.

இத்துண்டிப்பினால் மன்னார் பகுதிக்கான குழாய் நீர் விநியோகம் முற்றாகத் தடைப்பட்டுள்ளது.(17கி)

## அம்பாறையில் 110 சடலங்கள்


அம்பாறையில் புதைகுழியொன்றிலிருந்து நூற்றிப் பத்து சடலங்கள் மீட்கப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவை கைது செய்யப்பட்ட பொலிஸாருடையவையாக இருக்கலாமெனவும் அரச அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (கி)

## மரம்விழுந்து வயோதிபர் பலி

பதுங்குகுழிக்கு தென்னை மரம் தறித்தவர், அத்தென்னை அவரின் மேல் விழுந்ததினால் பரிதாபகரமாக உயிரிழந்தார். இயக்கச்சியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் முத்தர் செல்லையா (55) என்பவரே மரணமானவராவார்.கி

## களம் பல கண்ட யாழ். கோட்டை (14)




10, ஒகஸ்ட். 1986 இல் யாழ். கோட்டைக்கு முன் காங்கேசன்துறை வீதியில் 15 அடி உயரமான அரண் ஒன்றினை புளொட் இயக்கத்தினர் அமைத்துக்கொண்டிருந்தனர். அவர்களை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கிச் சூடுகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் ஒன்று, யாழ்ப்பாணம் வாழைப்பழக்கடைப் பகுதியில் விழுந்து சிதறியதால், செ. ராமமூர்த்தி, ச. பாலச்சந்திரன், ச. ஞானலிங்கம் ஆகிய மூவரும் அவ்விடத்திற் கொல்லப் பட்டனர். 11 பேர் வரையில் கடுங்காயங்களுக்குள்ளாகினர்.

7, செப்டம்பர், 1986 அதிகாலையே யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்து ஷெல் தாக்குதல்கள் ஆரம்பமாகியது. கஸ்தூரியார் வீதியில் விழுந்த ஷெல்லிற்குப் பலர் பலியாகினர், வீடுகள் சேதமடைந்தன. மத்திய கல்லூரிக்கட்டிடங்களும், வேம்படி மகளிர் கல்லூரிக் கட்டிடங்களும் சேதமுற்றன, போராளிகளின் றொக்கட் தாக்குதல்களால் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரி பலதடவைகள் யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களினால் தாக்கப்பட்டிருக்கின்றது. 8, செப்டம்பர், 1986 இல் பெரும் சத்தத்துடன் குழந்தைகள் வார்ட்டின் மேல் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது. குழந்தைகளை வைத்திருந்த தாய்மார்கள் தம் குழந்தைகளை அணைத்துக்கொண்டு, கீழே விரைந்து இறங்கி விட்டதால் உயிர்ச்சேதம் தடுக்கப்பட்டது. அதற்கு ஒரு காரணம் தளபதி கிட்டுவின் முன்னெச்சரிக்கையான செயற்பாடாகும். யாழ்ப்பாணம் கோட்டையில் ஷெல் குத்தப்படுகின்றது என்ற சத்தம் எழுந்ததும் உடனடியாக அபாயமணி

★ செங்கை ஆழியான்

)சைரன்) ஒலிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, அந்த ஒலி கேட்டதும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச்செல்ல முடிந்தது, 29, ஒக்டோபர், 1986 இல் ஆஸ்பத்திரி முன்றலில் ஷெல் ஒன்று விழுந்தது. அதனால் நால்வர் உடனடியாகப் பலியாகினர். 3 பொலிஸ்காரர் உட்பட 32 பேர் காயங்களுக்குள்ளாகினர். மிக மோசமான ஷெல் தாக்குதல்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி மீது கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்பட்டது 30, மார்ச், 1987 அன்றாகும் 19ஆம் 20 ஆம் வார்ட்டுகளில் காயம் பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் கட்டில்களில் நோயைத் தீர்ப்பதற்காகப் படுத்திருந்த வேளையில் கோட்டையிலிருந்து ஷெல் ஏவப்பட்டது. அது அந்த வார்ட்டுகளில் விழுந்து பயங்கரமாக வெடித்தது, ஒன்பது நோயாளிகள் உடல் சிதறிக் கருகி மரணமடைந்தனர், 6 வயதிலிருந்து 64 வயது வரையிலான சடலங்கள் இரத்த வெள்ளத்திற் கிடந்தன. அந்த வார்ட்டுகளில் காயம் அடைந்தவர்கள் அனைவரும் சரிந்து கிடந்தனர். பிணக்குவியலாக அந்தப் பிரதேசம் காணப்பட்டது.''திட்டமிட்ட படுகொலைகள்' என யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி தீர்ப்பு வழங்கினார். யாழ்ப்பாணக்கோட்டை இராணுவத்தினரின் மிகக்கொடூரமான செயல் இதுவாகும்.

30, ஒக்டோபர், 1986 இல் மத்திய கல்லூரிப் பக்கமாக, யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்திலிருந்து இராணுவத்தினர் கடும் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர். சரமாரியாகத் துப்பாக்கிச் சன்னங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வெடித்தன. பாடசாலை மாணவர்கள் பாதுகாப்பாகத் தரைகளிற் படுத்துக்கொண்டனர் தன் வகுப்பு மாணவர்களைப் பாதுகாப்பாகத் தரையிற் படுக்குமாறு கூறிக்கொண்டிருந்த மாணவர் தலைவன் பொ. விபுலாநந்தன் பாய்ந்துவந்த துப்பாக்கிச் சன்னத்திற்கு இரையாக நேர்ந்தது. விபுலாநந்தனின் இடதுபக்க முதுகிற் பாய்ந்த சன்னம் அவர் உயிரைப் பலியெடுத்தது. காலை 7 மணியிலிருந்து 3 மணிவரை கல்லூரிகள் பக்கமாக எதுவித ஆயுதப் பிரயோகமும் நிகழ்த்தமாட்டோம் என்ற வாக்குறுதியை யாழ்ப்பாணக் கோட்டை இராணுவக் கப்டன் கொத்தலாவல தந்திருந்தார். அது மீறப்பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகையின்போது யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தளபதி கிட்டுவும் கோட்டை முகாம் இராணுவ அதிகாரிகளும் இடைக்கிடையே பேசிக்கொள்வதுண்டு. யாழ்பாணக் கோட்டைக்குரிய தண்ணீர் விநியோகம் (குழாய் வழிபானது) நிறுத்தப்பட்டபோது கப்டன் கொத்தலாவல விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டுவுடன் பேசி மனிதாபிமான ரீதியில் தண்ணீர் பெற்றுக் கொண்டார். யாழ். கோட்டை இராணுவக் கப்டன் கொத்தலாவலயும் தளபதி கிட்டுவும் கோட்டை வாசலிற் பேசிக்கொண்ட சம்பவங்கள் சில உள்ளன. (தொடரும்)

MURASOLIE REGISTERED AS A NEWSPAPER IN SRILANKA 22-07-1990 ஞாயிற்றுக்கிழமை

# ஆடி அமாவாசை; நேர்த்தியான நிறைவு

(கல்வியங்காடு)

மா, சீனி, சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்காக வியாபார நிலையங்களுக்கு முன்னால் மக்கள் நீண்ட வரிசையில் நிற்பது வழக்கம்.

ஆனால் வழமைக்கு மாறாக கல்வியங்காட்டில் உள்ள கடையொன்றுக்கு முன்னால் நேற்றுக் காலை நீண்டதொரு கியூ காணப்பட்டது.

அதில் ஆண்களும் பெண்களுமாக நிறையப் பேர் நின்றிருந்தார்கள். தயிரும் மோரும் வாங்குவதற்காகவே அவர்கள் அப்படி நீண்ட வரிசையில் காத்திருந்தார்கள். நேற்று இந்துக்களின் ஆடி அமாவாசைத்தினமான விரதநாளாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# ஈழச் சிறார்கள் நல்வாழ்விலும் தமிழக அரசு ஈடுபாடு

இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழ் நாடு வரும் அகதிகள் குடும்பங்களைச்சேர்ந்த இளம் சிறார்களுக்குக் கல்விப் பணி அளிப்பதிலும் தமிழ் நாடு அரசு கவனம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகள் நலன் வாழ்வில் தமிழ்நாடு அரசு மத்திய அரசின் உதவிகொண்டு பல நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# 33 கோடி ரூபா ஹிரோயின் கடலில் சிக்கியது

33 கோடி ரூபா பெறுமதியான ஹிரோயின் போதை வஸ்துக்களை இலங்கைக்குக் கடத்தி வர முயன்ற சிலர் இந்தியக் கண்காணிப்பாளரிடம் பிடிபட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதில் இலங்கையருடன் பாகிஸ்தானியரும் சேர்ந்து செயற்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (ஸ்ரீ)

## பொம்மர் தாக்குதல்

நேற்றுக் காலை செட்டிக் குளத்தில் கங்கன் குளம் பகுதியில் நடைபெற்ற பொம்மர்த் தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஸ்ரீ

## தமிழர்...

அவர் சொன்னார்.

தம்மைச் சந்தித்த ஓர் குழுவிடம் இதை வெளிப்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இக்கட்சியின் மற்றுமொரு முக்கியஸ்தரான திரு. ஜே. பி. மாது. இலங்கைப் பிரச்சினையும் எம் முக்கிய செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது'' என்று தெரிவித்தார்.

மத்திய அரசுடனான இணைப்பில் இக்கட்சி இறுகிய தொடர்பு கொண்டுள்ளதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ

## வி. பி. சிங்..

தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியும் வெகு விரைவில் நேரில் சந்தித்து விரிவான சம்பாஷனை நடத்துவர் என அறியவருகிறது என புது டில்லிவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச் சந்திப்பு புதுடில்லியிலேயே நடைபெறும் என்றும் நம்பப்படுகிறது.

தமிழகம் வரும் ஈழத்தமிழ் அகதிகளுக்கு உதவுவதில் தமிழக அரசுமுன்னோடி நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ள போதிலும் மத்திய அரசின் நிதியுதவி தேவையாகின்றது.

அகதிகள் விடயத்தில் வெளிநாடுகள், நிறுவனங்களின் உதவி கோரலாமா? என மத்திய அரசு ஆலோசித்து வருவதாகவும் பிரதமர் திரு. சிங் கூறியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## யுவதிகள்...

## சுதந்திர தினத்தன்று

எதிர்வரும் சுதந்திர தினத்தன்று ஈழத் தமிழர்க்கு வேட்டி, சேலைகள் மற்றும் சீருடைகள் வழங்கப்படுமென்றும் அவர் செ1ன்னார். (ஸ்ரீ)

## இன்று

ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள் வங்கி சேவை உத்தியோகஸ்தர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று நல்லூர் ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இக்கூட்டத்தில் ப. நோ .கூ. சங்கங்கள் ஊடாக விவசாய உற்பத்திகளை அதிகரித்தல், விளைபொருட்களை சந்தைப் படுத்தல் போன்ற விடயங்கள் ஆராயப்படவிருக்கின்றன. (66ஸ்ரீ)

## உணவுப்...

மா, சீனி, பருப்பு, பால்மா, மருந்து வகைகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டு வந்துள்ளன.

மதவாச்சி செல்லும் வழியில் ஆனையிறவு தடை முகாமுக்கு அண்மையில் இத்தொடர் வண்டிகள் சென்றுகொண்டிருக்கும் போது போராளிகளுக்கும் ஸ்ரீலங்கா ராணுவத்தினருக்குமிடையில் நடைபெற்ற மோதல்களின் போது யாழ். ப. நோ. கூ. சங்க லொறிச்சாரதியான திரு.வே. பழனி என்பவர் காயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த அணியில் சென்ற செஞ்சிலுவைச் சங்க லொறியில் யாழ்.குடாநாட்டுக்கான தபால் பொதிகளும் எடுத்து வரப்பட்டுள்ளன. லொறிகளில் கொண்டுவரப்பட்ட 50,000 கிலோ மா, 24,000 கிலோ அரிசி, 20,000 சீனி 6,000 பைக்கற் லக்ஸ்பிறே 4,100 பைக்கற் விட்டாஸ் பிறே, 6800 கிலோ மஞ்சல் பருப்பு, 10,800 பைக்கற் திரிபோஷா மா என்பன தற்போது நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி உணவுப் பொருட்களை எவ்வாறு பங்கீடு செய்வது என்பது தொடர்பான ஒரு மகாநாடு இன்று யாழ். அரச அதிபர் தலைமையில் யாழ்.மாநகராட்சி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. 66—ஸ்ரீ

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மி பில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 22-7-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது,

# கைதிகளான அகதிகள் எங்கே?


# பாதிரியாரிடம் ராணுவம் சொன்னது

# அப்படியா? தெரியவில்லையே:

நேற்று முன்தினம் திருமலை நிலாவ தேவாலயத்தில் அகதிகளாக இருந்த பதினெட்டு அகதிகளை இராணுவம் கைது செய்து சென்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை விடுவிப்பது தொடர்பாக அப்பகுதி கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் இராணுவத்தினருடன் தொடர்புகொண்டபோது ''நாம்எவரையும் கைது செய்யவில்லை பச்சைப்புலிகளே (Green Tigers) கைது செய்துள்ளனர் இவர்களுக்கும் எமக்கும் தொடர்பில்லை என கைவிரித்து விட்டனராம் என நேற்று விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது இவ்வாறுஇருக்கஆனையிறவில் குறிஞ்சாத்தீவுப் பகுதியில் ஹெலிகள் மூலம் இறக்கப்பட்ட இராணுவத்தினரை தொடர்ந்து விடுதலைப் புலிகள் தாக்கிவருவதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ)



நேற்று மாலை விடுதலைப்புலிகளினால் விடுதலை செய்யப்பட்ட பொலிஸாரில் ஒருபகுதியினர்

## இன்று

(நாவற்குழி)

விடுதலைப்புலிகளின் வெற்றி வன்முறை ஒய்வு தமிழர் நல்வாழ்வு இயல்பான சகஜநிலை வேண்டி பெரிய மாவடி வித்தகம் மடாலயத்தில் இன்று 24 மணித்தியாலம் தொடர்ச்சியான பஜனை நடைபெறுகின்றது.

தென்மராட்சியில் உள்ள பல பஜனை கோஷ்டிகள் இதில் பங்கு கொள்கின்றன. இதற்கான சகல ஏற்பாடுகளையும் பெரியமாவடி வித்தகம் மடாலயபதி திரு.க.சின்னத்தம்பி மேற்கொண்டுள்ளார். ப-5-ஸ்ரீ

## ஆறு கட்சிகள்...

வெளியிட்ட பி.பி.ஸி இதே வேளை தேர்தலையோ வேறு எந்த அரசியல் நடவடிக்கையையோ வடக்குக் கிழக்கில் நடைமுறைப் படுத்த முடியாது எனவும் விடுதலைப்புலிகள் இப்பகுதிகளில் பலமான அமைப்பாக இயங்குவதே இதற்கான காரணம் எனவும் நேற்றிரவு சுட்டிக்காட்டியது. (ஸ்ரீ)

## புலிகளினால்...

ருதீன் (அம்பாறை), எஸ். எவ். முகமட்பாயிஸ் (அம்பாறை), சீ. பாஸ்கரன் (மட்டுநகர்), எஸ்.ரி.எம்.மின்காச்(பொத்துவில்), சி. சிவயோகராஜன் (எருவில்), ஓ. எல். றபயிடீன் (அம்பாறை), ஏ. ஆர்.பைசல் (அம்பாறை), எம். வரதராஜன் (மட்டுநகர்), த. ரவீந்திரராஜன்(திருமலை), ஏ.எல். எம். அசிஸ் (அம்பாறை), எம். ஐ. எல். செய்யத்சாலி (அட்டாளைச்சேனை) து.மனேகரன்(யாழ்ப்பாணம்) ஏ. நவாஸ் (அக்கரைப்பற்று), எம். ஆர். தாகீர் (கிண்ணியா) வ. வாசன் (மட்டுநகர்), சி. பற்குணன் (கொக்கட்டிச்சோலை). 9ஸ்ரீ

## சரணடைந்த...

விடுதலை பகிரங்கமாக அமைவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

தம்மிடம் சரணடைந்த ஏனைய பொலிஸார் படிப்படியாக விடுதலையாவர் என்றும் அவர்கள் கூறினர்.

பத்திரிகையாளர் குறிப்பிட்ட பதினேழு பொலிஸாரையும் அணுகி உங்கள் எதிர்காலச் செயற்பாடு என்ன என்று வினாவிய போது'', நாம் விடுதலைப் புலிகளால் நன்கு மனிதாபிமான ரீதியில் பராமரிக்கப் பட்டோம். இனி எம் எண்ணம் விடுதலைப் புலிகளுடன் இணைந்து மண் மீட்புக்காகப் போராடுவதே'' என்றனர், (ஸ்ரீ)

# பிரகடனப்படுத்தாத போர் அன்னையர் முன்னணி ஆய்வு

தமிழீழப் பிரதேசமெங்கும் ஸ்ரீலங்கா இனவாத அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் தமிழ் பேசும் மக்கள் மீதான பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் பற்றியும் அதன் விளைவாக ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான சூழ்நிலை பற்றியுமான கலந்துரையாடல் ஒன்று யாழ், மாவட்ட அன்னையர் முன்னணியினரால் யாழ். கோண்டாவில் மேற்கிலுள்ள இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது,

மேற்படி அன்னையர் முன்னணியின் தலைவி திருமதி சரஸ்வதி கனகரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், தற்சமயம் அம்பாறை மாவட்டத்திலும் ஏனைய கிழக்குப் பகுதிகளிலும் சிங்கள ராணுவம் மேற்கொண்டுவரும் மனிதாபிமான மற்ற கண்மூடித்தனமான தாக்குதல்களையும் இனப்படுகொலைகளையும் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் எம் மக்களுக்கெதிரான அரச பயங்கரவாத நடவடிக்கைகள் யாவும் உலக நாடுகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டிய தன் முக்கியத்துவமும் ஆராயப்பட்டது.

இன்னும் தமிழ் பேசும் மக்கள் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையைக் கண்டித்ததுடன் இனிவரும் நெருக்கடியான காலகட்டத்தில் எம் மக்கள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் சில முக்கிய தீர்மானங்கள் இக் கூட்டத்தில் எடுக்கப்பட்டன,

அடுத்த கூட்டம் எதிர்வரும் 25-ம் திகதி உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது எனத்தெரிவிக்கப்படுகிறது, ஸ்ரீ

## பாதிப்பு என்கிறார் அத்வானி

தேசிய முன்னணியின் தனித்துவத்தை ஹரியானா முன்னாள் முதல்வர் ஓம் பிரகாஷ் சௌதாளா விவகாரம் பாதித்து விட்டது என்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் திரு. எல். கே. அத்வானி நேற்று சென்னையில் தெரிவித்தார். (ஸ்ரீ)

# கண்ணீர் அஞ்சலி

## திரு. நாகலிங்கம் ஞானவடிவேலு

புங்குடுதீவு 11-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் சின்னம்மாவின் அன்பு மகன் ஞானவடிவேல் 15.7.90இல் கொழும்பில் அகால மரணமானார். அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் சசிகலா, சந்திரகலா, இந்திரகலா (கனடா), கமலஹாசன், சசிகுமார், சசிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வகுமார் (தொழிலதிபர், ஸ்ரீ சிவசக்தி இண்டஸ்றீஸ் கொக்குவில்) குகனேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவஞானம், பாலகுரு, ரஞ்சிதமலர் ஆகியோரின் சகோதரரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 16.7 90இல் கொழும்பில் கனத்தை மயானத்தில் ஈமக்கிரியைகள் யாவும் நடைபெற்றன இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:

07037 T. செல்வகுமார் (மருமகன்)